TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108534

1. District மாவட்டம் : Tiruppur PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 5/2022/AC/TPR Date: நாள் 25.03.20

2. (i) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act 1988 as amended by Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 11.03.2022 Date to : நாள் வரை 21.03.2022
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை 15.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.03.2022 Time நேரம் : 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.03.2022 Time நேரம் : 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் at about 50KM South East
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o the Revenue Divisional officer Dharapuram, Tiruppur District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Rajendran
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Karuppana Devar
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 51/2022
(d) Nationality நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Screen Printing
(g) Address : முகவரி Door NO.193/2, KNP Subramani Nagar, 6th Cross street, TC Market Post, Tiruppur

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Mahendra Vincent, Assistant, O/o the RDO office, Dharapuram, Tiruppur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..............................,.............................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Rajmum 25/3/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

K Sasilekha 25.03.2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.03.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. SASILEKHA
Rank: நிலை Inspector of Police No. எண்
VSAL, Tiruppur.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 5/2022/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 25.03.2022-ம் தேதி காலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது K.ராஜேந்திரன், த/பெ. கருப்பணத்தேவர், கதவு எண். 193/2, KNP சுப்ரமணி நகர், 6வது குறுக்கு வீதி, T.C மார்க்கெட் அஞ்சல், திருப்பூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர்:- K.ராஜேந்திரன், த/பெ. கருப்பணத்தேவர், கதவு எண். 193/2, KNP சுப்ரமணி நகர், 6வது குருக்கு வீதி, T.C மார்க்கெட் அஞ்சல், திருப்பூர். செல்போன்: 9788333955 பெறுநர்:- காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர். அய்யா, நான் திருப்பூர் மாவட்டம் TC மார்க்கெட் அஞ்சல் கதவு எண் 193/2 KNP சுப்ரமணி நகர், 6வது குறுக்கு தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் செந்தூர் முருகன் ஸ்கிரீன் பிரிண்டர்ஸ் கம்பெனி நடத்தி வருகிறேன். எனது அப்பா கருப்பணத்தேவருக்கு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த விதிகளின் படி திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டம், பொன்னாபுரம் கிராமம் க.ச.எண் 869/1B 2.18 ஏக்கர் நிலத்தை ஈரோடு நிலச்சீர்திருத்த கூடுதல் அதிகாரம் பெற்ற அதிகாரி அவர்களின் ஒப்படை எண் 688 நாள் 29.12.1981படி கண்டிசன் பட்டாவாக வழங்கபட்டது. எனது அப்பா 6.5.2018 தேதி காலமாகிவிட்டார். எனது அப்பாவிற்கு நானும் எனது தங்கை பாலாமணியும் வாரிசுகளாகும். எனது அப்பா பெயரில் உள்ள கண்டிசன் பட்டாவை அயன் பட்டாவாக மாற்றினால் தான் எனது பெயருக்கு பட்டா மாற்ற முடியும் என்பதால் நான் மேற்படி கண்டிசன் பட்டாவை அயன் பட்டாவாக மாற்ற முடிவு செய்து நான் 10.8.2021 தேதி தாராபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி.கிருஷ்ணவேணி என்பவரிடம் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்தேன். அவர் இந்த மனுவை தாராபுரம் வட்டாட்சியர் அவர்களுக்கு வெரிபிகேசனுக்கு அனுப்புவதாகவும் 2 வாரம் கழித்து தாலுக்கா அலுவலகம் சென்று நிலச்சீர்திருத்த செக்சன் பார்க்கும் ஜெயந்தி என்பவரை பார்க்க சொன்னார். அதன் பின்னர் நான் ஒரு மாதம் கழித்து தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று நிலச்சீர்திருத்த செக்சன் பார்க்கும் ஜெயந்தி என்பவரைப் பார்த்தேன்.

அவர் உங்களது பைலை பொன்னாபுரம் VAO மற்றும் RI ஆகியோருக்கு களஆய்வு செய்வதற்கு அனுப்புவதாக சொல்லி VAO மற்றும் RI இருவரையும் பார்க்க சொன்னார். நான் டிசம்பர் மாதம் கடைசியில் பொன்னாபுரம் VAO திரு. சௌந்திரராஜன் அவர்களை பார்த்தேன். அவர் ஆவணங்களைப் பார்த்துவிட்டு மேற்படி நிலத்தை சர்வேயர் மூலம் அளந்து கோப்பை RIக்கு பரிந்துரை செய்துள்ளதாகவும் RI அவர்களைப் பார்க்குமாறும் சொன்னார். அதன் பின்னர் நான் பொன்னாபுரம் பிர்கா RI வனிதா அவர்களைப் பார்த்தேன். அவர் ஆவணங்களைச் சரிபார்த்துவிட்டு தாசில்தாருக்கு பார்வர்டு செய்வதாகவும் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று பார்க்குமாறும் சொன்னார். நான் 2022 வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்று நிலச்சீர்திருத்த செக்சன் பார்க்கும் ஜெயந்தி அவர்களைப் பார்த்தேன். அவர் பைலை தாசில்தாருக்கு வைப்பதாகவும் தாசில்தார் இடத்தை பார்க்கவருவார் என்றும் வரும்போது தகவல் சொல்வதாகவும் கூறிவிட்டு எனது செல்போன் நம்பரை வாங்கினர். இதனையடுத்து ஜனவரி மாதம் கடைசியில் ஜெயந்தி அவர்கள் எனது செல்போனுக்கு தொடர்புகொண்டு தாசில்தார் இடத்தை பார்க்க வருவதாக என்னிடம் சொன்னார். அதன் பின்னர் வட்டாட்சியர் திருமதி.ஷைலஜா அவர்கள் இடத்தைப் பார்வையிட்டு சென்றார். அதன்பின்னர் பிப்ரவரி மாதத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜெயந்தி அவர்களைப் பார்த்தேன். அவர் உங்கள் பைலை RDOவுக்கு அனுப்பி விட்டதாகவும் ஒரு வாரம் கழித்து போய் பாருங்கள் என்றும் சொன்னார். நான் 9.3.2022 தேதி காலை தாராபுரம் RDO அலுவலகம் சென்று RDO PA திருமதி.கிருஷ்ணவேணி அவர்களைப் பார்த்தேன். அவர் உங்களது பைலை உதவியாளர் திரு.மகேந்திர வின்செண்ட் என்பவர் பார்ப்பதாகவும் அவரைப் போய் பார்க்குமாறும் சொன்னார். நான் RDO அலுவலகத்தில் இருந்த உதவியாளர், திரு.மகேந்திர வின்செண்ட் அவர்களைப் பார்த்தேன். அவர் என்னிடம் உங்களது பைல் RDO என்கொயரிக்காக 11.3.2022 தேதி போட்டுள்ளதாகவும் அன்று காலை 11.00 மணிக்கு RDO அலுவலகத்திற்கு ஆவணங்களுடன் வருமாறும் சொன்னார். நான் 11.3.2022 தேதி காலை சுமார் 11.00 மணியளவில் RDO அலுவலகம் சென்று உதவியாளர் திரு.மகேந்திர வின்செண்ட் அவர்களைப் பார்த்தேன். அவர் எனது பைலை எடுத்துக்கொண்டு RDO திரு.குமரேசன் அவர்களிடம் அழைத்துச் சென்றார். RDO அவர்கள் என்னை விசாரித்து விட்டு ஆவணங்களையெல்லாம் சரிபார்த்து விட்டு பைலை முடித்து தருவதாக சொல்லி பைலை

திரு.மகேந்திர வின்சென்ட் அவர்களிடம் கொடுத்தார். மகேந்திர வின்சென்ட் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு அவரது இருக்கைக்கு வந்து பார்மாலிட்டி இருக்கிறது. இந்த பைலுக்கு ரூ.50,000/- தனக்கு தனியாக தரவேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் பணத்திற்கு எங்கே போவேன் நான் விண்ணப்பித்து 6 மாதம் ஆகிறது சீக்கிரமாக முடித்து தாருங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னை கவனித்தால் தான் சீக்கிரமாக பைலை முடிக்க முடியும் என்று சொன்னார். அதன் பின்னர் இரண்டு மூன்று முறை RDO அலுவலகம் சென்று மகேந்திர வின்சென்ட் அவர்களைப் பார்த்தேன். அவர் தான் கேட்ட பணத்தை கொடுத்தால் தான் பைலை RDO அவர்கள் பார்வைக்கு வைத்து ஆர்டர் வாங்கித் தருகிறேன் என்று சொன்னார். இந்நிலையில் 21.3.2022 தேதி மதியம் சுமார் 2 மணியளவில் எனது செல்போன் எண்ணிலிருந்து அவரது செல்போனுக்கு தொடர்புகொண்டு பைல் ரெடியாகி விட்டதா என்று கேட்டேன். அதற்கு அவர் நேரில் வாருங்கள் பேசிக்கலாம் என்று சொன்னார். இதனையடுத்து நான் 21.3.2022 தேதி மாலை சுமார் 3 மணியளவில் தாராபுரம் RDO அலுவலகம் சென்று மகேந்திர வின்சென்ட் அவர்களைப் பார்த்தேன். அப்போது அவர் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.50,000/-த்தில் இருந்து ரூ.5000/- குறைத்து ரூ.45,000/- கொடுத்தால் தான் சீக்கிரமாக ஆர்டர் வாங்கித்தருவதாக சொன்னார். அதற்கு நான் எனது தொழிலே நஷ்டத்தில் இயங்கி வருகிறது. பணம் தரமுடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் இறுதியாக ரூ.25,000/- கொடுத்தால் தான் RDO அவர்களிடம் அயன் பட்டாவுக்கான ஆர்டர் பெற்றுத் தருவதாகவும் சீக்கிரமாக பணத்தை ரெடிபண்ணிவிட்டு வாங்க என்று சொன்னார். அதற்கு நான் சரி பார்க்கலாம் என்று சொல்லி வந்துவிட்டேன். நான் தாராபுரம் RDO அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.மகேந்திர வின்சென்ட் அவர்களுக்கு கண்டிசன் பட்டாவை அயன் பட்டாவாக மாறுதல் செய்ய RDO அவர்களுக்கு பைலை வைத்து ஆர்டர் பெற்றுத்தர லஞ்சமாக பணம் ரூ.25,000/- கொடுக்க விருப்பமில்லை எனவே அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/-xxxx K.Rajendran, 25.3.2022. Sir, Received the complaint on 25.03.2022 at 09.00 hrs and conducted enquiry between 09.00 hrs to 09.30 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.05/2022/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 at 09.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha) 25.03.2022 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.K.Rajendran, S/o.Karupanadevar, Door No.193/2, KNP Subramani Nagar, 6th cross street, TC Market PO, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

25.03.2022
(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.